செ.வெ.எண்:41 நாள்:22.02.2018

**அரியலூர் மாவட்டம், தேவாமங்கலம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாம் நிறைவு நாள் விழாவில் 80 பயனாளிகளுக்கு ரூ.6 லட்சத்து 72 ஆயிரத்து 755 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) திரு.சே.தனசேகரன் அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம் அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.**

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், தேவாமங்கலம் கிராமத்தில் **மக்கள் தொடர்பு முகாம் நிறைவு நாள் விழா** மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) **திரு.சே.தனசேகரன்** அவர்கள் தலைமையில் இன்று (22.02.2018) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், வருவாய்த்துறையின் சார்பில் 60 பயனாளிகளுக்கு ரூ.6 இலட்சம் மதிப்பில் இலவச வீட்டு மனைப்பட்டாக்களுக்கான ஆணைகளையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 9 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணைகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.3,355/- மதிப்பிலான விசைதெளிப்பான், தென்னங்கன்று, வேளாண் இடுபொருட்களையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 6 பயனாளிகளுக்கு ரூ.69 ஆயிரத்து 400 மதிப்பில் மழைத்தூவான், இன கவர்ச்சி பொறி, மஞ்சள் வண்ண அட்டைகளையும் ஆக மொத்தம் **80 பயனாளிகளுக்கு ரூ.6 லட்சத்து 72 ஆயிரத்து** 755 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) **திரு.சே.தனசேகரன்** அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) அவர்கள் பேசியதாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் கிராமங்களில் உள்ள பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் திட்டங்களைப் பற்றி அறிந்துகொள்வதற்காகவும், நலத்திட்டங்கள் வழங்குவதற்காகவும் மக்களைத் தேடி, அரசு அலுவலர்கள் வருகை புரிந்து, இம்மக்கள் தொடர்பு முகாம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் ஒரு முகாமும், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தலைமையில் ஒரு மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் தேவைகளை அறிந்து, அவர்களின் வேலை பளுக்களை குறைத்திடும் வகையில் இதுபோன்ற முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு பெறப்படும் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, சரியான முறையில் கோரிக்கைகள் இருந்தால், உடனடியாக நிறைவேற்றிட அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, இதுபோன்று நடைபெறும் மக்கள் தொடர்பு முகாமில் திரளான பொதுமக்கள் கலந்துகொண்டு, தங்களின் தேவைக்கேற்ப அரசின் திட்டங்களை தெரிந்து பயன்படுத்தி பயன்பெறுமாறு **மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) திரு.சே.தனசேகரன் அவர்கள்** பேசினார்கள்.

**இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசியதாவது :-**

தமிழர் நலமே தன் நலம் என்று வாழ்ந்து, மக்களுக்காகவே, தன்னை அர்ப்பணித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் வழியில் நடைபெறும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் நடைபெறும் அரசு எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், இங்கு நடைபெறும் மக்கள் தொடர்பு முகாம் போல் அனைத்து மக்கள் தொடர்பு முகாமில் கலந்துகொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். இம்மாதிரி மக்கள் தொடர்பு முகாமில் கலந்துகொள்வதால், இப்பகுதி மக்களின் தேவைகளை கண்டறிந்து, உடனுக்குடன் அரசு அலுவலர்களுடன் இணைந்து, பல நலத்திட்டங்களை செய்ய முடிகிறது.

இந்தியாவிலேயே மக்களுக்காக பல்வேறு விதமான நலத்திட்ட உதவிகள் அனைத்துறைகளிலும் வழங்கப்படுவது, தமிழகத்தில் மட்டுமே. இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கால்நடை மருத்துவமனை விரைவில் தமிழக அரசால் கொண்டு வரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

எனவே, இதுபோன்ற மக்கள் தொடர்பு முகாமினை கிராமப்புற மக்கள் பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வழங்கல் அலுவலர் இ.கதிரேசன், துணை இயக்குநர் சுகாதாரத்துறை மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை முடநீக்கியியல் வல்லுநர் ராமன், ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் வேல்முருகன், ஜெயங்கொண்டம் வட்டார வளர்ச்சி அலுவலர் அமிர்தலிங்கம், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைப்பராமரிப்புத்துறை, தாட்கோ, உணவு பாதுகாப்புத்துறை அலுவலாக்ள் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக ஜெயங்கொண்டம் வட்ட வழங்கல் அலுவலர் சம்பத் வரவேற்புரை ஆற்றினார். முடிவில், மண்டல துணை வட்டாட்சியர் ஆனந்தவேல் நன்றி கூறினார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.